# மாற்றுக் கருத்தின் மதிப்பு




2

கலிலியோ கலிலெயி

•

ரோஸா லக்ஸம்பர்க்

•

ஜவஹர்லால் நேரு

•

ரொபர்ட் ஈ மட்ச்

•

மார்க் ட்வொயின்

•

ஜோன் ஸ்ருவார்ட் மில்

323.4
MAR
AR

ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம்

# இவ்வெளியீட்டுத் தொடர் பற்றி....

மாறுபடட கருத்துக்களைச் சுதந்திரமாகப் பரிமாறிக் கொள்வதில் முன்னேற்றம் தங்கியிருக்கின்றது என்பது இவ்வெளியீட்டுத் தொடரின் ஆய்வுப் பொருளாகும். இது சீரிய அரசியலாட்சிக்கு மட்டுமல்ல கலாச்சார, விஞ்ஞான, பொருளாதார நாகரீக வளர்ச்சிக்கும் இன்றியமையாதது. குறிப்பிட்டவொரு நிலைபரத்தின் தேவைக்காகக் கருக்கொண்ட இத்தொடரின் முதலாவது வெளியீடு சர்வதேசப் பரப்பில் விநியோகித்தபோது பல்வேறு சமூகத்தவரின் இனிய உணர்ச்சிகளை எதிரொலித்தது. சகிப்பின்மை பயங்கர வேகத்தில் பரவ, சமீபகாலமாக தீவிர வன்முறையால் இலங்கை விகாரமடைந்து கொண்டிருக்கும்வேளையில் இத்தொடரை வெளியிடும் எண்ணம் உதித்தது. இந்தப் பின்னணியில் ஜ.உ.பா.இ மாற்றுக்கருத்து வெளியிடும் உரிமையின் அத்தியாவசியத்தை மட்டுமல்ல, மாற்றுக் கருத்தின் உள்ளார்ந்த மதிப்பையும் யாவருக்கும் விளங்க வைப்பதை முன்னுரிமைப் பணியாக மேற்கொள்வதை இனங்கண்டு கொண்டது. இந்த நேரிய உண்மையை வலியுறுத்திக் கூறி உதாரணங்காட்டி உள்ளத்தில் பதியவைக்க வேண்டும். ஆகவே ஜ.உ.பா.இ இந்த ஆய்வுப் பொருளுக்குப் பொருத்தமான ஆக்கங்களைத் தெரிவு செய்து, தொகுத்து, மொழிபெயர்த்து வருகின்றது. அரசியல் ஆய்வறிவாளர்கள், தத்துவஞானிகள், அவர் போன்ற பிற சிந்தனைச் சிற்பிகள் ஆகியோர் எழுத்துக்கள், சட்டத்தீர்ப்புக்கள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் வரலாறுகள், தனிநபர் மனச்சாட்சிக்கும் நிலையூன்றிய ஆட்சியாளருக்குமிடையில் நிகழும் மோதலின் பலனாய் உணர்ச்சி யூட்டப்பட்ட அனுபவங்களைச் சித்தரிக்கும் இலக்கிய நாடகப் படைப்புகள், இன்னும் சில மனிதரின் கருத்து வேறுபாடு தொடர்பான சுவையான உதாரணங்கள், நடந்து கொண்டிருக்கும் விவகாரங்களைப் பற்றிய விளக்க உரைகள் ஆகிய துறைகள் இவற்றுளடங்கும்.

சுதந்திரமாய் கருத்துப் பரிமாறுவதற்கெதிரான அச்சுறுத்தல் அரசாங்கத்தினால் மட்டும் சுமத்தப்படுவதில்லை. அத்தகைய அச்சுறுத்தல்கள் வேறு மூலங்களிலிருந்தும் தோற்றமளிக்கின்றன, தோற்றமளிக்கவும் முடியும்.

– பல்வேறான சமூக, அரசியல் பிரிவுகளிடமிருந்து, கூட்டாகவோ தனியாகவோ கொண்ட மனோபாவத்திலிருந்து, ஏன் பெரும் பான்மையோரின் பகிரங்கமான கருத்து வெளியீட்டிலிருந்து, அத் தன்மையான அச்சுறுத்தல் ஏற்படலாம். உண்மையிலேயே தனக்கெதிரான கருத்து வெளியீட்டை பெரும்பாலான சமூக ஆதரவுடன்தான் அரசாங்கம் அடிக்கடி நசுக்குகின்றது; சமூகத்தின் காய்தல் உவத்தல்களை அரச செயற்பாடுகள் பலவிதமாய்ப் பிரதிபலிக்கின்றன. எனினும் சகிப்பின்மை எங்கிருந்துவரினும் சமூகத்துக்கு ஆபத்தானதால் அதை இனங்கண்டு எதிர்க்கவேண்டும். இந்தக் குறிக்கோளே இந்த வெளியீட்டுத் தொடரின் உந்துசக்தி.

ஆங்கிலம் சிங்களம் தமிழ் மொழிகளில் இத்தொடர் வெளியாகிறது. இங்கே சேர்க்கப்பட்ட எழுத்தோவியங்கள் குறிப்பிட்டவோர் ஒழுங்கிலோ ஒன்றோடொன்று தொடர்புள்ளவையாகவோ இப்போதைக்குத் தொகுக்கப்படவில்லை. காலப்போக்கில் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு தொகுதியாக இவற்றைச் சிறந்த முறையில் வெளியிடுவதுதான் உத்தேசம். தொகுதியில் இடம்பெற்றுள்ள கருவூலங்கள் வாசகர்களிடம் இருந்து ஆலோசனைகளையும், பங்களிப்புகளையும் தூண்டிவிடும் என்று எதிர்பார்க்கிறோம்.

இதைப்பார்க்கிலும் முழுமையான திட்ட விவரணம் மாற்றுக்கருத்தின் மதிப்பு கொண்டுள்ளது. பின்னட்டை உட்புறத்தைப் பார்க்கவும்.

# மாற்றுக் கருத்தின் மதிப்பு

ARCHIVES

LIBRARY ★ UNIVERSITY OF JAFFNA ★

# மாற்றுக் கருத்தின் மதிப்பு

## 2

323.4
MAR

AR

UNIVERSITY OF JAFFNA LIBRARY

ARCHIVES

NA-1.

இலங்கை ஜனநாயக உரிமைகளைப்
பாதுகாப்பதற்கான இயக்கம்

**ஆசிரியர் குழு**
சார்ள்ஸ் அபேசேகர
குமாரி ஜயவர்த்தன
சூரியா விக்கிரமசிங்க

**மேற்பார்வை ஆசிரியர் (தமிழ்)**
வே. கணபதிப்பிள்ளை

**பிரதான ஆய்வாளர் தொகுப்பாளர்**
மார்க் தொம்ப்ஸன்

**திட்ட இணைப்பாளர்**
ரஞ்சித் பெரேரா

**தமிழாக்கம்**
ஏ. ஏ. லதீஃப்

**பதிப்புரிமை**
இலங்கை ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் - 1997

**வெளியிட்டவர்**
இலங்கை ஜனநாயக உரிமைகளைப்
பாதுகாப்பதற்கான இயக்கம் சார்பில்
பேர்ணடீன் சில்வா
31, சார்ள்ஸ் பிளேஸ்
கொழும்பு 3

முதலாவது பதிப்பு - யூலை 1993
இரண்டாவது பதிப்பு - செப்டெம்பர் 1997

**அச்சிட்டவர்**
கருணாரத்ன அன்ட் சன்ஸ் லிமிட்டட்
647, குலரத்ன மாவத்தை
கொழும்பு 10
இலங்கை.

# உள்ளடக்கம்

*கலிலியோ கலிலெயி* 1

**இரண்டு பிரதான உலக அமைப்புகள்**

*றோஸா லக்ஸம்பர்க்* 5

**சர்வாதிகாரம் பற்றிய பிரச்சனை**

*ஜவஹர்லால் நேரு* 11

**குடியுரிமைச் சுதந்திரம்**

*ரொபர்ட் ஈ மட்ச்* 13

**அரசியல் சகிப்புத்தன்மை**

*மார்க் ட்வொயின்* 21

**ஹக்ல்பெரி ஃபின்னின் துணிகரச் செயல்கள்**

*ஜோன் ஸ்ருவார்ட் மில்* 25

**தனி நபரின் தனித்துவம் பற்றி**

நன்றி நவிலல் 28

UNIVERSITY OF JAFFNA LIBRARY

கலிலியோ கலிலெயி (1564-1642)

# இரண்டு பிரதான உலக அமைப்புகள்

*பூமியல்ல, சூரியனே பிரபஞ்சத்தின் மையம் என்று வாதாடிய 17ம் நூற்றாண்டு விஞ்ஞானி, கலிலியோ கலிலெயின் வழக்கு இணங்காமை (மாற்றுக் கருத்து) கொடிய வகையில் நசுக்கப்பட்டதற்கு மனித வரலாற்றில் மிக பிரபலமான வழக்காக உள்ளது. 1632ம் ஆண்டு ஃபுலோரன்ஸ் நகரில் (இத்தாலி) பிரசுரிக்கப்பட்ட இரண்டு பிரதான உலக ஒழுங்குகள் பற்றிய உரையாடல் அவருடைய ஆராய்ச்சி நூலாகும். கத்தோலிக்க திருச்சபையின் உயர் நீதிமன்றம் அதைத் தடைசெய்தது.*



கலிலியோ கலிலெயி

*முதுமை, உடல்நலக் குறைவு காரணமாக வெகு தூரம் பிரயாணம் செய்வது கடினம் என்று விஞ்ஞானி மன்றாடிய போதிலும், 68வயதான கலிலியோ ரோமா புரியில் விசாரணைக்குச் செல்லும்படி கட்டளை யிடப்பட்டார். சென்ற காலத் தவறுகளைத் தான், "கைவிட்டு, சாபமிட்டு, வெறுத்து" விட்டதாக மொழியும்படி பலவந்தப்படுத்தப்பட்டார். எனினும், நீதிமன்றத்திலிருந்து வெளியேறுகையில், "எப்புர் சி முவோவே" (அது [பூமி] நகரத்தான் செய்கிறது) என்ற வசனத்தை வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டு சென்றதாக கர்ணபரம்பரையான கதையொன்று கூறுகிறது. இறுதிநாள் வரை கலிலியோ வீட்டுக் காவலில் சிறைவைக்கப்பட்டார்.*

*பின்வரும் பகுதி கலிலியோவின் தடைசெய்யப்பட்ட ஆய்வு நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இதில் பல்வேறு வான சாஸ்திர போக்குகளுடைய பிரதிநிதிகள் தத்தமது கருத்துக்களை தெரிவிக்கின்றனர்.*

சிம்பிளிஸியோ

பிரபஞ்சத்தின் மையம் பூமியல்ல சூரியன்தான் என்ற முடிவுக்கு எவ்வாறு வந்தீர்கள்?

ஸல்வாட்டோ

மிகவும் தெளிவான, பலம்வாய்ந்த நம்பகமான அவதானத்தி

லிருந்தே அம்முடிவெடுக்கப்பட்டது. பூமியை மையத்திலிருந்து அகற்றி விட்டு சூரியனை மையத்தில் அமர்த்தும் புலனுக்குட்பட்ட தோற்றந்தான் ஒரு வேளையில் கிரகங்கள் அனைத்தும் பூமிக்கு அருகே இருப்பதும், இன்னொரு வேளையில் தொலைவில் இருப்பதுமாகும். இவ்வித்தியாசங்கள் மிக பாரியவையாகும். உதாரணமாக, வெள்ளி மிக தொலைவிலிருக்கும் போது பூமியிலிருந்து ஆறு மடங்கு தூரத்திலுள்ளது; மிக அருகே இருக்கும் போது ஆறு மடங்கு அருகே உள்ளது. ஒருவேளையில், செவ்வாய்க் கிரகம் பூமியிலிருந்து சுமார் எட்டு மடங்கு தூரத்துக்கு உயர்கிறது; அதே போல சுமார் எட்டு மடங்கு அருகே வருகிறது. அவை எப்போதும் பூமியிலிருந்து சம தூரத்தில் இருப்பதாக அரிஸ்டோட்டல் பிழையாக நம்பி சற்று ஏமாறினார் என்பது உங்களுக்குப் புலப்படும்.

ஸிம்பிளியோ

அவை சூரியனை வலம் வருவதற்கு அறிகுறிகள் என்ன?

ஸல்வாட்டோ

இது வேறு மூன்று கிரகங்களிலிருந்து - செவ்வாய், வியாழன் மற்றும் சனி - கிடைக்கப்பெறும் தகவலாகும். அவை சூரியனுக்கெதிர்ப்புறம் இருக்கும்போது எப்போதும் பூமிக்கு மிக அருகே உள்ளன; அருகே இருக்கும் போது தூரத்தில் உள்ளன. அருகே வருவதும் தொலைக்குச் செல்வதும் மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். செவ்வாய்க் கிரகம் வெகு தொலைவில் இருக்கும் போது தோன்றுவதை விட அருகே இருக்கும் போது அறுபது மடங்கு பெரிதாக இருக்கிறது. அடுத்தபடியாக வெள்ளியும் புதனும், தம்மை சுற்றி சூரியனை வலம் வருவது உறுதியான நிகழ்ச்சியாகும். ஏனென்றால் அவை ஒரு போதும் சூரியனிலிருந்து வெகு தூரம் நகர்வதில்லை. ஒருவேளை சூரியனிலிருந்து வெகு அப்பால் அவற்றை காண்கிறோம்; இன்னொருவேளை அதனருகே காண்கிறோம். வெள்ளியின் உருவ மாற்றங்கள் இதை முடிவாக நிரூபிக்கின்றன.

***பின்குறிப்பு***

*கத்தோலிக்க திருச்சபை தான் தவறு செய்து வந்ததை 1992 அக்டோபர் 31ந் திகதி உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டது. இது பற்றிய பல பத்திரிகைச் செய்திகள் ஒன்றிலிருந்து பின்வரும் தகவல் தரப்படுகிறது.*

**வத்திகான் நகரம்** - அக்டோபர் 31(ஏ.எப்.பி)

பூமி தன்னைத்தானே சுற்றி சூரியனை வலம் வருகிறது என்று கூறியமைக்காக வான சாஸ்திரி கலிலியோவை நீதிமன்றத்தின் முன் நிறுத்தியது கத்தோலிக்க சபை செய்த தவறு என்று சனிக்கிழமை இரண்டாவது ஜோன் பால் பாப்பரசர் கூறினார்.

பௌதிக அறிவாளியான கலிலியோவின் மேல் பெரும் பழி சுமத்திய 17ம் நூற்றாண்டு வழக்கு மறுசீராய்வு பற்றி 12-ஆண்டு இறுதியில் பேசும் போதே இது அறிவிக்கப்பட்டது. அன்று கலிலியோவின் முடிவுகள் புரட்சிகரமானதாக கருதப்பட்டன. தன்னுடைய தத்துவத்தை தானே மறுத்துரை செய்து மன்னிப்புக் கோரும்படி கலிலியோ அன்று நிர்ப்பந்திக்கப்பட்டார். அந்த வழக்கு விசாரணை "ஒருவரையொருவர் புரிந்து கொள்ளத் தவறியதால் ஏற்பட்ட சோகமான சம்பவம்" என்று பாப்பரசர் கூறினார்.

கலிலியோ பிஸா நகரில் பிறந்தவர் (1564-1642).

பூமி தன்னைத் தானே சுற்றி சூரியனை வலம் வந்ததென்ற போலந்து நாட்டு குருவான கோபர்னிகஸின் (1473-1543) முடிவுகளை ஆதரித்த காரணத்தால் கலிலியோ ரோமாபுரி திருச்சபை உயர்நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டார்.

கத்தோலிக்க திருச்சபை "கலிலியோ விவகாரத்திலிருந்து படிப்பினை பெற வேண்டும். அது நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் பொருத்தமானது" என்று இரண்டாவது ஜோன் பால் பாப்பரசர் சனிக்கிழமை கூறினார்.

நட்சத்திர மண்டலத்தின் கட்டமைப்பை சொல்லுக்குச் சொல் விஸ்வாசமாக வேத நூல்களிலிருந்து மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியுமென்று அன்றைய மதஆய்வாளர் நம்பியது "பிழை" என்று அவர் கவலை தெரிவித்தார்.

கலிலியோ "ஒரு உண்மையான விஸ்வாசி", "சமயப்பற்றுடையவர்", அவர் மீது குற்றஞ் சுமத்தியது "அவசரப்பட்ட எதிர்மறை" செயல் என்று பாப்பரசர் மேலும் கூறினார்.

"மத நம்பிக்கையை பாதுகாக்கும் ஆர்வத்தில், ஆழமாக ஆராய்ந்து எடுக்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகளை அவர்கள் நிராகரிக்க நேர்ந்தது" என்று பாப்பரசர் கூறினார்.

கலிலியோ வழக்கை மீளாய்வு செய்யும்படி தான் கட்டளையிட்டதாக பாப்பரசர் கூறினார். விஞ்ஞானத்துக்கும் நம்பிக்கைக்குமிடையே உள்ள உறவு சம்பந்தப்பட்டதால் மீளாய்வு 12 வருட காலம் பிடித்தது.

“ஆகவே ஒருநாள் இதே போன்ற வழக்கு ஏற்படலாம் என்பதை தவிர்ப்பது சாத்தியமல்ல. தத்தம் சொந்த ஆற்றல்களின் எல்லை குறித்து இருசாராரும் உணர்ந்திருக்க வேண்டு” மென்று பாப்பரசர் மேலும் கூறினார்.

தமது அரண்மனையின் இராசகூடத்தில் உலக நாடுகளின் தூதுவர்கள் கூடியிருந்த மதவிஞ்ஞான சிறப்பமர்வொன்றில் பாப்பரசர் இவ்விளக்கமளித்தார்.

றோஸா லக்ஸம்பர்க் (1870 - 1919)

# சர்வாதிகாரம் பற்றிய பிரச்சினை


றோஸா லக்ஸம்பர்க்

றோஸா லக்ஸம்பார்க் மார்க்ஸிய இயக்கத்தின் உயர்ந்த புகழ்பூத்த திறமிக்க பெண்மணியாகவும், அதன் தலைசிறந்த புரட்சிகர சிந்தனை யாளர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார். போலந்தில் யூத குடும்பமொன்றில் பிறந்தார். ஸ்விட்ஸர்லாந்தில் படித்தார். ஜெர்மனிக்கு இடம்பெயர்ந்த அவர், ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியில் (எஸ்.டி.பி) தீவிரமாக உழைத்து அதன் உன்னதத் தலைவர்களிலொருவராக விளங்கினார். முக்கியமான பிரச்சினை கள் தொடர்பாக மார்க்ஸிஸ சிந்தனைக்கு "முதலீடு திரட்டல்". "தேசிய பிரச்சினையும் சுயாட்சியும்". "திரிபுவாதத்துக்கு எதிராக", மற்றும் "தொழிற் சங்கமும் வெகுஜன வேலை நிறுத்தமும்" என்ற எழுத் தோவியங்கள் மூலம் பங்களிப்புச் செய்தார். தேசிய பிரச்சினை குறித்து ஏனைய மார்க்ஸிய சிந்தனை யாளர்களுடன் பாரதூரமான அரசியல் கருத்து வேற்றுமை கொண்டி ருந்தார். போல்ஷ்விக் புரட்சிபற்றிய அவருடைய ஆராய்ச்சிக்கட்டுரை பெரும் வாதப் பிரதிவாதத்தை தோற்றுவித்தது.

முதலாம் உலக யுத்தத்தின் போது ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி ஜெர்மனியை ஆதரித்ததை றோஸா லக்ஸம்பர்க் கண்டித்தார். ஜெர்மன் இராணுவவாதத்தை எதிர்த்த மாக்ஸிய குழுவில் இருந்தது காரணமாக சிறையிடப்பட்டார். லக்ஸம்பர்க் மற்றும் கார்ல் லிப்னெக்ட் தலைமையில் ஜெர்மனியில் இயங்கிய இடதுசாரி எதிரணியினர் ஸ்பார்ட்டகஸ்ட் குழுவை அமைத்தனர். தோல்வியுற்ற 1919 புரட்சியில் இவர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். அரச சக்திகளால் இறுதியில் அவர்கள் கொலை செய்யப்பட்டனர். லக்ஸம்பர்கை விமர்சித்த இடதுசாரியினர் கூட அவர் இறந்தபோது, புரட்சிகர சிந்தனைக்கும் நடைமுறைக்கும் அவர் செலுத்திய பங்களிப்பைப் பாராட்டினர். லெனின் கூறினார்:"தவறுகள் செய்திருந்த போதிலும் அவர் எமக்கு ஒரு கழுகாக இருந்தார் - தொடர்ந்தும் இருப்பார்".

றோஸா லக்ஸம்பார்க் 1918ல் சிறையிலிருந்தபோது, அக்டோபர் புரட்சியின் விளைவு இன்னும் நிச்சயமற்றதாய்க் காணப்படுகையில் அவருடைய பிரபலமான "ருஷ்யப் புரட்சி" எனும் சிறு பிரசுரத்தை எழுதினார். நெஞ்சில் நிலைத்திருக்கும் அவருடைய வாசகங்களில் மிகச் சிறப்பானது பின்வருங் கூற்றாகும்:- அரசாங்கத்தின்

*ஆதரவாளர்களுக்கு மாத்திரம் சுதந்திரம் என்பது ஒருபோதும் சுதந்திரமாகாது; சுதந்திரம் என்பது எப்போதும் வேறுபட்டுச் சிந்திப்பவனுக்கே.*

லெனின் கூறுகிறார் : பூர்ஷுவா அரசு தொழிலாளி வர்க்கத்தின் ஒடுக்குமுறைக் கருவி; சோஷலிஸ அரசு பூர்ஷுவாவின் ஒடுக்குமுறைக் கருவி. ஓரளவுக்கு அதன் தலைமையில் நிற்பது முதலாளித்துவ அரசமைப்பாகும் என்கிறார் அவர். எளிமைப் படுத்தப்பட்ட இக்கருத்து அதிமுக்கிய விடயத்தைக் தவறவிட்டு விடுகின்றது: பூர்ஷுவா வர்க்க ஆட்சிக்கு முழுமக்கள் கூட்டத்தினரின் அரசியல் பயிற்சியும், கல்வியும் - குறைந்தபட்சம் குறிப்பிட்ட குறுகிய எல்லைகளுக்கப்பால் - தேவைப்படுவதில்லை. ஆனால் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைப் பொறுத்தவரை அது அதன் உயிர்நாடியாகும். அப்பிராண வாயுவின்றி அது உயிர்தரிக்கவே முடியாது.

"அரசாங்கச் சக்தியின் பட்டவர்த்தனமான நேரடிப் போராட்டம் காரணமாக உழைக்கும் மக்கள் கூட்டம் மிகக் குறுகிய காலத்துள் கணிசமான அளவு அரசியல் அனுபவம் பெற்று தங்களது வளர்ச்சியின் ஒரு கட்டத்திலிருந்து மேலான மற்றொன்றுக்கு வேகமாக முன்னேறுகின்றனர்" என எழுதுகின்றார் ட்ரொட்ஸ்கி.

இங்கே, ட்ரொட்ஸ்கி தன்னையும் தன் நண்பர்களையும் மறுத்து வாதாடுகின்றார். இது இவ்வாறிருப்பதனாலேயே பொது வாழ்க்கையை நசுக்குவதன் மூலமாக அரசியல் அனுபவத்தின் ஊற்றுக்கண்ணை, உயர்ந்தெழும் இவ்வளர்ச்சியின் ஆதார மூலத்தை அவர்கள் அடைத்துவிடுகின்றனர்! அன்றேல், போல்ஷ்விக்குகள் ஆட்சியைக் கைப்பற்றும் வரைதான் அனுபவமும் வளர்ச்சியும் தேவைப்பட்டது. அப்புறம், அவற்றின் கொடுமுடியை அடைந்த பின் அவை மித மிஞ்சிவிட்டன என்றே நினைக்க வேண்டும். (லெனின் சொற்பொழிவு : சோஷலிஸத்துக்கு ரஷ்யா வெல்லப்படுகின்றது !!!)

உண்மையில், எதிர்மாறான நிலைமையே வெளிப்படுகின்றது. போல்ஷ்விக்குகள் துணிவோடும், தீர்மானத்தோடும் மேற்கொண்டுள்ள பிரம்மாண்ட.மான முயற்சியின் பெரும் பணியே மக்கள் கூட்டத்தின் தீவிர அரசியல் பயிற்சியையும், முதிர்ந்த அனுபவத்தையும் கோரி நிற்கின்றது.

அரசின் ஆதரவாளர்களுக்கு மட்டுமே சுதந்திரம், ஒரு கட்சியின் உறுப்பினர்களுக்கு மட்டுமே - அவர்கள் பெருந்தொகையினராக

இருந்தபோதிலும் - சுதந்திரம் என்பது சுதந்திரமேயன்று. சுதந்திரம் என்பது எப்பொழுதும், வேறுபட்டுச் சிந்திக்கும் ஒருவருக்கு ஆதீனமான சுதந்திரமாகும்; நீதி பற்றிய விடாப்பிடியான கோட்பாடு கருத்து வெளிப்பாடு காரணமாகவன்றி, அரசியல் சுதந்திரத்தில் அறிவுறுத்தக் கூடியதாய், நற்பயன் தருவதாய், தூய்மைப்படுத்துவதாய் அமைந்துள்ள யாவுமே இவ்வ த்தியாவசியப் பண்புநலனில் தங்கியுள்ள படியால்த்தான். ஆனால் "சுதந்திரம்" ஒரு தனிச்சிறப்புரிமையாய் மாறும் போது வலிமை குன்றி அது மறைந்துவிடுகிறது.

படிப்படியாக அவர்கள் சூழ்நிலையை எடைபோட வேண்டும்; முயற்சிசெய்து பார்க்க வேண்டும்; சோதனை செய்தலை மேற்கொள்ள வேண்டும். இப்பொழுது ஒருவிதம், இனி இன்னொருவிதம் எனப் பரீட்சித்துப் பார்க்க வேண்டும் - அவர்களது அதிகமான பல செயற்பாடுகள், விலைமதிப்பற்ற முத்துக்களைப் பிரதிபலிப்பதில்லை - என்பதனை போல்ஷ்விக்குகள் நெஞ்சில் கைவைத்து மறுப்பதற்கு விரும்பமாட்டார். அது அப்படித்தான் இருக்க வேண்டும். அதே நிலைக்கு வரும்போது நாமும் அப்படித்தான் இருப்போம் - எல்லா இடங்களிலும் ஒரேவிதமான தெளிவற்ற சூழ்நிலை நிலவாதிருக்கக் கூடும் என்ற போதிலும்.

சர்வாதிகாரம் பற்றிய லெனின் - ட்ரொட்ஸ்கி கோட்பாட்டின் அடிப்படையான - சொல்லாமலே விளங்கக் கூடிய ஊகம் இதுதான்: அதாவது, சோஷலிஸ மாற்றம் என்பது அதற்கென ஏலவே தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட சூத்திரமொன்றை புரட்சிவாதக் கட்சி தனது சட்டைப் பையில் வைத்திருக்கிறது. இனி செய்யவிருப்பதெல்லாம் அதனை வேகமாகச் செயற்படுத்துவது மட்டுமே. ஆனால் தீமைக்கோ, அல்லது சிலவேளை நன்மைக்கோ, விவகாரம் இதுவன்று. சோஷலிஸத்தை சமூக, பொருளாதார, நீதி முறைமையாக நடைமுறையில் காண்பதென்றால் அது வருங்காலத்தின் பனிமூட்டத்தினுள் முழுக்க முழுக்க மறைந்து கிடக்கும் ஒன்றாகும். நமது அமைப்புத் திட்டத்தில் அடங்கி இருப்பதெல்லாம், தேவையான நடைமுறைகளைத் தேட வேண்டிய பொதுவான திசையைக் காட்டும் சில பிரதான வழிகாட்டிகள் மட்டுமே. அதுவும் அதிகமாக எதிர்மறை இயல்புகள் கொண்டவையாகத் தென்படுகின்றன. இவ்வாறு, சோஷலிஸப் பொருளாதாரத்துக்கான பாதையிலிருந்து முதலில் அப்புறப்படுத்தப்பட வேண்டியவை எவையென்பதை கிட்டத்தட்ட அறிகின்றோம். ஆனால்,

பொருளாதாரத்தில், சட்டத்தில், சமூக உறவுகளில் சோஷலிஸக் கோட்பாடுகளை பழக்கத்திற் கொண்டுவருவதற்குத் தேவையான பெரிதும் சிறிதுமாய் ஓராயிரம் திட்டவட்டமான நடைமுறைச் செயற்பாடுகளின் இயல்பை நோககும்போது எந்தவொரு சோஷலிஸக் கட்சியின் திட்டத்திலும், பாடநூலிலும் அவற்றுக்கு விடைகாண திறவுகோல் கிடையா. இதுவொரு குறைபாடன்று. பல்வேறுபட்ட கற்பனாவாதங்களைவிட விஞ்ஞான சோஷலிஸம் அதி மேம்பட்டு விளங்குவதே இதனால்தான்.

இறுதிப்பகுப்பாய்வாக, சோஷலிஸ சமுதாய அமைப்பு வரலாற்றிலிருந்து உற்பத்தியானதாய் இருக்க வேண்டும், உயிரோட்டம் கொண்ட வரலாற்றின் வளர்ச்சிகளின் விளைவாய் உண்டாகும் அதன் போக்குகளிலிருந்து தோன்றும் சொந்தப்பாடங்களிலிருந்து முளைப்பதாய் இருக்கவேண்டும். மெய்யான சமூகத்தின் தேவையுடன் அச்சமூகத்தைத் திருத்தியமைக்கும் வழிவகைகளையும் மேற்கொள்ள வேண்டிய பணியையும் ஒரே நேரத்தில் ஒன்றாக உருவாக்கும் வியத்தகு பழக்கம் வாய்ந்த இயல்பினதாய் இருக்கவேண்டும். அவ்வாறு மட்டுமே இருக்கமுடியும். என்றபோதிலும் விவகாரம் இவ்வாறிருப்பின், சோஷலிஸம் அதன் மெய்யான இயல்பு காரணமாகவே, ஆணைகளினால் புகுத்தப்படவோ, கட்டளையிடப்படவோ முடியாதென்பது தெள்ளத்தெளிவு. சொத்துடைமை இத்தியாதி போன்றவற்றுக்கெதிராக பல பலாத்காரமான முன் நடவடிக்கைகளை அது கையாளவேண்டி உள்ளது. எதிர்மறையானவை, தகர்த்தெறியப்பட வேண்டியவை எவை எனக் கட்டளையிடலாம். ஆனால் நிர்மாணிக்கப்பட வேண்டியவை, உடன்பாடானவை எவை என அவ்வாறு கட்டளையிடப்பட முடியாது. அவை முன்பின் அறியாப் புதிய பிரதேசம், ஓராயிரம் பிரச்சனைகள், திருத்தங்கள் கொணரவும், புதிய பாதைகளைத் திறந்துவிடவும் ஆற்றல் வாய்ந்தது அனுபவம் மட்டுமே. தடையேதுமின்றி நுரைத்தெழும் வாழ்க்கை மட்டுமே ஓராயிரம் புதிய வடிவங்களுக்கும் சமயத்துக்கேற்ற ஏற்பாடுகளுக்கும் உட்பட்டு ஆக்க சக்தியை வெளிக்கொணர்ந்து தவறான முயற்சிகளைத் தானாகவே திருத்திக்கொள்கிறது. சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்ட நாடுகளில் வாழ்க்கை வறுமைப்பட்டதாக, துன்பமயமாக, விறைப்பானதாக, பயனற்றதாக மாறிவிடும். ஜனநாயகம் நீக்கப்படுவதால் உயிர்நாடிகளான ஆன்மீகச் செழுமைகளும், முன்னேற்றமும் துண்டிக்கப்பட்டு இவ்விளைவு நிகழ்கின்றது. (சான்று

: 1905ம் வருடமும், 1917 பெப்ரவரியிலிருந்து ஒக்டோபர் வரையான காலப்பகுதியும்) அங்கு அது அரசியல் தன்மை வாய்ந்ததாயிருந்தது. பொருளாதார, சமூக வாழ்க்கைக்கும் இது பொருந்தும், முழு மக்கள்திரளும் அதில் பங்குபற்ற வேண்டும். இன்றேல், உத்தியோக மேசைகளின் பின்னாலிருந்து கடமை புரியும் ஒரு டஜன் புத்திமான்கள் சோஷலிஸத்தைக் கட்டியெழுப்புமாறு கட்டளையிடப் படுவார்கள்.

பொதுக்கட்டுப்பாடு தவிர்க்க முடியாதவாறு அத்தியாவசியமாகின்றது. இன்றேல் அனுபவப் பரிமாறல்கள் புதிய ஆட்சியைச் சேர்ந்த அதிகாரிகளின் மூடிய வட்டத்தினுள் முடங்கிவிடும். ஊழல் தவிர்க்க முடியாததாய்விடும். (லெனின் சொன்னது, அரசியல் செய்தி வெளியீடு இல. 29) நூற்றாண்டுகளாக பூர்ஷுவா வர்க்க ஆட்சியினால் இழிவுபடுத்தப்பட்ட மக்களின் முழுமையான ஆன்மீக மாற்றத்தை சோஷலிஸம் அவர்தம் வாழ்வில் மலர வேண்டுமெனக் கோரிநிற்கின்றது. சுய இயல்பூக்கங்களுக்குப் பதிலாக சமூக இயல்பூக்கம், சோம்பல்தனத்துக்குப் பதிலாக மக்களின் செயலூக்கம், சகல விதமான துயரங்களையும் வெற்றிகொண்டு முழு நிறைவு அடையும் போக்கு இத்தியாதி இத்தியாதி, லெனினைவிட வேறெவரும் இதனைச் சிறப்பாகத் தெரிந்திருக்கவோ, மிகவும் கூர்மையான வகையில் விளக்கவோ இல்லை. ஆனால் அவர் கையாண்ட செயல்முறைகளில் முழுமையாகத் தவறுவிடுகின்றார். கட்டளை; ஆலை மேற்பார்வையாளரின் சர்வாதிகார நிர்ப்பந்தம், மிகக் கொடூரமான தண்டனைகள், பயங்கரவாத ஆட்சி -இவை யாவும் வியாதியைப் போக்காமல் வலியை மட்டும் தணிவிக்கக்கூடியவை தவிர வேறில்லை. பொதுவாழ்க்கைப்பள்ளி, மிகவும் மட்டற்ற, பரந்த ஜனநாயகம், பொதுமக்களின் அபிப்பிராயம் - இவையே மறுபிறவிக்கான ஒரேவழி. பயங்கரவாத ஆட்சிதான் ஒழுக்கக் கேட்டையுண்டுபண்ணுகிறது.

இவையாவும் நீக்கப்பட்ட பிறகு, மெய்யாக மிஞ்சுவதென்ன? பொதுத் தேர்தல்கள்மூலம் மக்களால் உருவாக்கப்படும் பிரதிநிதித்துவ அமைப்புகளுக்கு பதில், லெனினும், ட்ரொட்ஸ்கியும் சோவியத்துக்களை உழைக்கும் மக்களின் உண்மையான ஒரே பிரதிநிதித்துவ அமைப்பாக விதித்தனர். ஆனால் நாடுமுழுவதும் அரசியல் வாழ்வை ஒடுக்குவதனால், சோவியத்துக்களிலும் வாழ்க்கை அதிகமதிகம் முடக்கமடையும். பொதுத்தேர்தல்களின்றி, தங்குதடையற்ற பத்திரிகைச் சுதந்திரமும், ஒன்றுகூடும் சுதந்திரமுமின்றி சுதந்திரமான

சொற்போர்களின்றி, ஒவ்வொரு பொது நிறுவனத்திலும் வாழ்க்கை மூச்சு நின்றுவிடும். அது போலி வாழ்க்கையாக மாறிவிடும். அங்கு உத்தியோக வகுப்பு மட்டுமே செயற்படும். பொது வாழ்க்கை படிப்படியாகப் படுத்துவிடும்; சலிப்படையாச் சக்திவாய்ந்த, எல்லையில்லா அனுபவம் பெற்ற ஒரு சில டஜன் கட்சித் தலைவர்கள் நெறிப்படுத்தவும், ஆட்சிபுரியவும் செய்வர். அவர்கள் மத்தியில் மெய்யாக, ஒரு டஜன் தலைவர்கள் மட்டுமே தலைமையேற்பர். அவர்களின் பேச்சுக்களுக்குக் கைதட்டவும், அவர்கள் முன்மொழியும் தீர்மானங்களை ஒருமனதாக அங்கீகரிக்கவும் அவர்கள் இருக்குமிடங்களுக்கு, தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் காலத்துக்குக் காலம் கூட்டங்களுக்கு அழைக்கப்படுவர் - அப்படியெனின் அது ஒரு அரசியல்வாதக் கும்பலின் விவகாரம் - ஒரு சர்வாதிகாரம்; நிச்சயமாகப் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமல்ல. அதாவது பூர்ஷுவா அர்த்தத்தில், ஜெக்கோபின்களது ஆட்சியின் அர்த்தத்தில் சர்வாதிகாரம். (சோவியத் காங்கிரஸை மூன்றுமாத காலத்திலிருந்து ஆறுமாத காலத்துக்கு ஒத்திப்போடல்). ஆம், நாம் இன்னும் அதிகங் கூறலாம். இதுவரை விளக்கிய நிலைமைகள் தவிர்க்க முடியாதவாறு பொதுவாழ்க்கையை மிருகத்தனமானதாய் மாற்றிவிடுகின்றன: கொலைமுயற்சிகள், பணயக் கைதிகளைச் சுட்டுத் தள்ளுதல், இத்தியாதி. (கட்டுப்பாடும் ஊழலும் பற்றிய லெனின் சொற்பொழிவு).


---

மாற்றுக் கருத்தின் மதிப்பை அங்கீகரிப்பதென்பது மாற்றுக் கருத்தைச் சகித்துக் கொள்ளும் மனப்பான்மையை மதித்தல் என அர்த்தப்படும். தனிநபர் காட்டும் மறுப்பு பெரும்பாலும் அற்பமாகத் தோன்றலாம். பித்துக்குளிகளின் உளறல்கள் அல்லது நடப்பியல் அளவுகோலின்படி அவ்வாறு கருதப்படுபவையும் இதில் அடங்கும். ஆனால் மாற்றுக் கருத்து எந்தளவு சகித்துக் கொள்ளப்படு கின்றதோ அந்தளவு சமூகத்தின் ஆரோக்கியத்தைப் பிரதி பலிப்பதோடு முன்னேற்றத்துக்கான சாத்தியப்பாடுகளை அது தன்னகத்தே கொண்டிருப்பதையும் மாற்றுக் கருத்தின் மதிப்பு 1 பிரசுரத்தின் அறிமுகவுரையிலிருந்து உறுதிப்படுத்தும்.

ஜவர்ஹர்லால் நேரு (1889-1964)

# குடியுரிமைச் சுதந்திரம்

*1989ம் ஆண்டு பிறந்த நேரு 1905 ஹரோ கேம்பிறிட்சில் கல்வி பயின்று, 1912 இல் இந்தியா திரும்பினார். அன்று தொடக்கம் 1964 இல் இறக்கும்வரை, இந்தியாவின் அரசியல் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு பல ஆண்டுகள் இடையிடையே சிறை வாசஞ்செய்தார். 1920 இல் நிகழ்ந்த ஒத்துழையாமைப் போராட்டங்கள், குடிமக்கள் கீழ்ப்படியாமைப் போராட்டம், 1930 இல் உப்புச்சத்தியாக்கிரகம், 1943 இல் "வெள்ளையனே வெளியேறு" ஆகிய வரலாற்றுப் புகழ்பெற்ற இயக்கங்களில் நாட்டின் விடுதலைக்காக, மகாத் மாகாந்தியுடன் ஒன்று சேர்ந்து உழைத்தார். இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக பல முறை பணியாற்றிய அவர், காங்கிரஸில் சோஷலிஸ்ட் போக்குகள் சார்பினராவார். 1957 சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான அவர் இறக்கும்வரை அப்பதவியிலேயே இருந்தார்.*



ஜவர்ஹர்லால் நேரு

*ஏகாதிபத்திய எதிர்ப்பிலும், ஸ்பெயின், இத்தாலிய ஜெர்மனிய பாசிஸ எதிர்ப்பிலும் உலகத்தலைவர் முன்னணியில் நின்று கிளர்ச்சி செய்தவர், சுதந்திரத்தின் பின் அணிசேரா இயக்கத்தை உருவாக்கியவர்களில் ஒருவர். ஆபிரிக்க ஆசிய ஒற்றுமையையும், ஒருமித்து வாழ்வதையும், ஆயுத பிரயோக எதிர்ப்பையும் உலக சமாதானத்தையும் ஆதரித்துச் செயலாற்றியவர்.*

*வாழ்க்கை முழுவதும் சமூக ஜனநாயகக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்த நேரு, மதச்சார்பின்மை, கலவைப் பொருளாதாரம் விழுமிய மானிய ஒழுக்கம், சர்வதேச கண்ணோட்டம் ஆகிய பண்புகளில் பற்றுடையவராக செயற்பட்டவர். இனவெறி, சாதித்திமிர், வகுப்புவாதம், அறிவொளிப்பகைமை, மூடநம்பிக்கை, சமயாசார முரட்டுப்பிடிவாதம் ஆகியவற்றை எதிர்த்து வாதிட்டவர். அவரது பேச்சுக்களும் எழுத்துக்களும் பரந்த மனிதத்துவ கற்பனா நோக்கையும், ஒடுக்கப்பட்ட குழுமங்கள், தேசங்கள் விடுதலைபெற ஆதரவு காட்டியமையும் சுதந்திரத்திலும் ஜனநாயகத்திலும் ஆழமான ஈடுபாட்டையும் பிரதிபலிக்கின்றன.*

குடியுரிமைச் சுதந்திரம் எமக்கு வெறும் பளுவற்ற தத்துவமோ புனித விருப்பமொன்றோ அல்ல. ஆனால், ஒரு தேசத்தின் முறையான

விருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் அத்தியாவசிய மானதொன்றென்று அதை நாம் கருதுகிறோம். அது மக்கள் எதிர்மாறான கோணத்திலிருந்து பிரச்சினையொன்றை நாகரிகமாக கருத்துப் பரிமாறும் முறையாகும். அதை அஹிம்சா வழியில் அணுகுவதாகும். ஒரு வேறுபட்ட அபிப்பிராயத்தை நாம் விரும்பாத காரணத்தால் அதை மிதித்து வலுக்கட்டாயமாக நசுக்கிவிடுவதும், அதை வெளியிடுவதற்கு அனுமதிக்காதிருப்பதும், எதிரியொருவனை நாம் ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் அவனுடைய மண்டையை உடைப்பதற்கு சமமான செயலாகும். அதில் வெற்றியின் நற்பயன் கூட கிடையாது.

மண்டையுடைந்த மனிதன் விழுந்து மரிக்கக்கூடும். ஆனால் நசுக்கப்பட்ட அபிப்பிராயத்துக்கோ, கருத்துக்கோ சடுதியான அந்த முடிவு ஏற்படுவதில்லை. அது தொடர்ந்து உயிருடனிருக்கும். பலாத்காரமாக அதை நசுக்க முயற்சிக்குந்தோறும் அது செழித்தோங்கும். வரலாற்றில் அவ்வாறான உதாரணங்கள் ஏராளம்.

உண்மையின் நலன் நாடி அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் நசுக்குவது ஆபத்தானதென்று நீண்ட நெடிய அனுபவம் போதிக்கிறது. நசுக்குவது சாத்தியம் என்று கற்பனை செய்வது முட்டாள்தனமானதென்று அனுபவம் மேலும் போதிக்கிறது.

தீமையை தலைமறைவாக்கி பிடியில்லாது போகவிடுவதைப் பார்க்கிலும் அல்லது சரியான அணுகு முறையின்றி போகவிடுவதை பார்க்கிலும், தீமையை வெட்ட வெளிச்சத்தில் நேருக்கு நேர் சந்தித்து மக்கள் சிந்தனையில் போரிட்டு அகற்றுவது சுலபம்.

பகல் வெளிச்சத்தில் பார்க்கிலும் நிழலின் மறைவில் தீமை அதிகமாக செழிப்புற்று வளர்கிறது.

றொபர்ட் ஈ. மட்ச் (1940-)

# அரசியல் சகிப்புத் தன்மை

*றொபர்ட் ஈ. மட்ச் வாஷிங்டனைச் சேர்ந்த அரசியல் ஆய்வறிவாளியாவார். வாசிங்க்ரனில் வசிக்கும் அவர், "இயக்கங்கள், காங்கிரஸ் சபை மற்றும் நீதிமன்றங்கள் : சமஷ்டி இயக்க நிதி சட்டத்தின் ஆக்கம்" என்ற நூலின் ஆசிரியர். அரசியல் வரலாறு சம்பந்தப்பட்ட பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.*

பல ஆண்டுகளுக்கு முன்னர் சிறிய நாடொன்று எதிர்க்கட்சிப் பத்திரிகைகளுக்கு மூடுவிழா நடத்தி அரசாங்கத்துக்கு எதிரான பேச்சுக்களையும் எழுத்துக்களையும் தடைசெய்தது. பேச்சு சுதந்திரவுரிமை மறுக்கப்பட்டதையெதிர்த்து சர்வதேச மனிதவுரிமை ஸ்தாபனங்கள் கூக்குரல் எழுப்பின. அவ்வுரிமை அழித்தொழிக்கப் படவில்லை, அதன் பிரயோகத்தை தற்காலிகமாகத் தடுத்து வைப்பது அவசியமாகவிருந்தது என்று அந்நாட்டுத் தலைவர்கள் உலகுக்கு உறுதிமொழியளித்தனர்.

மெய்யாக முன்னேற்றமுற்ற நாடொன்றின் முக்கியமான வரையறைகளிலொன்றாக பேச்சு மற்றும் பத்திரிகை சுதந்திரம் கருதப்படுகிறது. குடிமக்களுக்கு இவ்வுரிமைகளை அலட்சியமாக மறுப்பதன்மூலம் சில நாடுகளின் தமக்கு இழிநிலையைத் தேடிக்கொள்கின்றனர். அவர்களுடைய நாட்டில் பேச்சுச் சுதந்திரம் நிலவுவதாக உண்மைக்கு மாறாக வாதித்து சர்வதேச கண்டனத்திலிருந்து தப்பித்துக்கொள்ளவே அநேகத் தலைவர்கள் ஆர்வங்காட்டுகின்றனர்.

நடைமுறையைப் பார்க்கிலும் கோட்பாட்டளவில் அச்சுதந்திரத்தை கடைப்பிடிப்பது இலேசான காரியமென்பது தெளிவு. கட்டுப்பாடற்ற பத்திரிகைகள் இருப்பது எவ்வேளையிலும் ஒரு பிரச்சினையல்ல. சில சந்தர்ப்பங்களில் அது ஒரு பகட்டான காட்சிப் பொருளாகவிருக்கலாம். வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு அவற்றைக் காட்டி மகிழலாம். ஆனால், பத்திரிகையாளர்களும் அரசியல் எதிரிகளும் அரசாங்கக் கொள்கைகளையும், அவற்றை வகுத்து செயல்படுத்தும் உத்தியோகத்தர்களையும் விமர்சிக்கும் போது நாட்டின் நலன் கருதி வாய் அடைக்கப்படவேண்டிய வைரிகள் என்று கருதுவது இலேசாகிறது. அவர்களை குடிமக்களென்று கருதுவது கடினமாகிறது. அதிகாரத்திலமர்ந்திருப்பவர்கள் இந்த விமர்சகர்களை எவ்வாறு நோக்கினர் என்பதை வரலாறு முழுவதும் அவர்கள் மீது

பயன்படுத்தப்பட்ட பெயர்கள் காட்டுகின்றன : வைதீக விரோதிகள், தெய்வ நிந்தனையாளர்கள், கட்சிமாறிகள், சீர்கேட்டாளர்கள், எதிர்ப்புரட்சிவாதிகள், தேசத் துரோகிகள், சமூகக்கழிவுகள்.

ஆளப்படுவோருக்கு ஆளுவோரால் வழங்கப்படும் சலுகையாக பேச்சுச் சுதந்தரம் கருதப்படும் பட்சத்தில் அது நிலைத்து நிற்க முடியாது என்பதை இந்தக் குற்றஞ்சுமத்தும் இழிபெயர்கள் காட்டுகின்றன. புதிதாகப் பெற்ற சுதந்திரத்தை ஆளப்படுவோர் ஆளுவோரை ஆத்திரமூட்டும் வகையில் உடனடியாகவோ, காலந்தாழ்த்தியோ பாவிப்பார்கள். அப்போது ஆளுவோர் "பரிசை" திருப்பியெடுத்துக் கொள்வார்கள். ஆளுவோரும் ஆளப்படுவோரும் ஒன்றாகவிருந்தால் மாத்திரமே எங்கே மக்கள் ஆள்கின்றனரோ அங்கே மாத்திரம் பேச்சு சுதந்திரம் ஆழமாக வேர் பாய்ச்ச முடியும். இதற்கான காரணம் தெளிவானதாகும்.

ஆளுவோர் தமக்கிடையே சுதந்திரமாக பேசக்கூடியதாக இருக்க வேண்டும். முழுப் பலமும் பெற்ற அரசனுக்குக் கூட ஆலோசகர்கள் இருப்பது அவசியம். ஏனைய குடிமக்களை விட அவ்வாலோசகர்கள் சுதந்திரமாகக் கருத்துத் தெரிவிக்க அதிகம் சுதந்திரம் படைத்தவர்களாவர். பத்திரிகைகளை தணிக்கை செய்யும் அரசாங்கம் கூட, தடைசெய்ய வேண்டியவற்றை பொறுக்கியெடுப்பதற்காக நூல்கள், கட்டுரைகள் அனைத்தையும் வாசிப்பதற்கு யாரையேனும் நம்பியாக வேண்டும். இறுதி அதிகாரம் அரசன் கையில் உள்ளது. ஒரு தனிநபர் அல்லது சில நபர்கள் வழங்கக்கூடிய தகவல், அனுபவம் மற்றும் கருத்துரை அதிகம் இன்றி அவ்வதிகாரத்தை பிரயோகிக்க முடியாது. ஆளுவோர் தொகை எவ்வளவு அதிகமோ, அவ்வளவு பரந்துபட்டிருக்கும் பேச்சுச் சுதந்திரம். தம்மைத் தாமே ஆளும் ஒரு மக்கள் இனம் - இது நேரடியாகவோ அல்லது தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ இருக்கலாம் - தாமே இறைமை பெற்றவர்களாகவிருப்பர். இந்த அதிகாரம் பெரும்பான்மை வாக்கு மூலம் பிரயோகிக்கப்படவேண்டும். பெரும்பான்மையானோர் கருத்தை சுதந்திரமாக வெளியிடும்போது மாத்திரமே அவர்களால் முடிவுகள் எடுக்கமுடியும்.

ஆங்கிலக் கவிஞன் ஜோன் மில்டன் பேச்சு சுதந்திரம் பாதுகாப்புப் பற்றிய அவனுடைய உன்னத படைப்பை 1644ம் ஆண்டில் எழுதினான். எல்லாத் தரப்புகளையும் பேச அனுமதிப்பதன் மூலம், புண்படுத்தக்கூடியதெனப் பலர் கொள்ளுங் கருத்துக்களை

வெளியிடும் தரப்பினரையும் அனுமதிப்பதன் மூலம் மாத்திரமே எம்முன் உண்மை வெளிப்படும் என்பது அவருடைய மையமான வாதமாகும். அன்று தொடக்கம் வெகுவாக மேற்கோள் காட்டப்படும் வாசகமொன்றில் அவருடைய தணிக்கை எதிர்ப்பை எடுத்துரைத்தார். "தத்துவங்களென்ற புயலனைத்தும் மண்மீது விளையாடிடவர ஏகாந்தமாய் விடப்பட்டபோதும், உண்மை நிலைத்திருக்கட்டும். தடையிடும்போது இடையூறு விளைவிக்கிறோம். உண்மையின் வலியை சந்தேகிக்கிறோம். உண்மையும் பொய்யும் மோதட்டும். தங்குதடையற்ற நேர்மையான மோதலில் உண்மை தோல்வியுற்றதில்லையே".

இரு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் ஆங்கில தத்துவஞானி ஜோன் ஸ்டுவர்ட் மில் "விடுதலை" என்ற அவருடைய பிரபலமான கட்டுரையில் மில்டனுடைய சிந்தனையை விரிவுபடுத்தினார். ஒரு கருத்துரையை நசுக்குவதும், "மனித குலத்தை - எதிர்கால சந்ததியினரையும், அதேபோல் சமகால சந்ததியினரையும் - மோசடிசெய்வதும்" ஒன்றே என்று அவர் சுட்டிக் காட்டினார். தடைசெய்யப்பட்ட கருத்துரை உண்மையாகவோ பொய்யாகவோ இருக்கலாம், நசுக்குவது மக்களுக்கு தீமை பயக்கிறது என்று அவர் மேலும் வலியுறுத்தினார். "கருத்துரை சரியானதாக இருந்தால், உண்மைக்குப் பதிலாக தவறை பரிமாறிக்கொள்ளும் அவர்களுடைய சந்தர்ப்பம் பறிபோகிறது, அது பிழையானதாக இருந்தால் உண்மை தவறோடு மோதும் போது ஏற்படும் உண்மை பற்றிய தெளிவான உணர்ச்சியும் துடிப்பான கருத்துப்பதிவும் இழக்கப்படுகிறது".

ஒரு கருத்துரை விவாதத்துக்கு வெளியரங்கில் விடப்படும் பட்சத்தில் மாத்திரமே அக்கருத்துரையின் உண்மையை நாம் நம்ப முடியுமென்று மில்டனும் மில்லும் வாதித்தனர். தணிக்கை விதிப்பவரின் கண்ணோட்டம் என்னவென்றால், சில கருத்துரைகளே உண்மையானவை என அவர் நம்புகிறார். ஆகவே அவை பற்றிய திறனாய்வு அனுமதிக்கப்பட மாட்டாது. திறனாய்வின் மூலம் மாத்திரமே உண்மையை உறுதியாய் அறியலாமென்றும், தாக்குப்பிடிக்கக்கூடிய கருத்துரைகளை மட்டுமே நாம் ஏற்றுக்கொள்ளமுடியுமென்றும் இவ்விரு எழுத்தாளர்களும் பதிலளித்தனர்.

இதே போன்ற கருத்தை புகழ்பெற்ற அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதியரசர்களுள் ஒருவராகிய ஒலிவர் வென்டல் ஹோம்ஸ் 1919ம் ஆண்டில் வெளியிட்டார்.

"கருத்துரை வெளியிடுங் காரணமாக துன்புறுத்தலுக்கு ஆளாக்கப் படுவது முழுதும் தர்க்கரீதியானதாகத்தோன்றுகிறது. உங்களுடைய நிலைப்பாட்டில் அல்லது ஆற்றலில் சந்தேகமில்லாது சில விளைவுகள் தோன்ற வேண்டுமென மனப்பூர்வமாக விரும்புவீர்கள். இயற்கையாகவே இவ்விருப்பம் சட்ட உருவம் பெறும். எதிர்ப்புகள்அனைத்தும் துடைத்தெறியப்படும். ஆனால், எத்தனையோ நம்பிக்கைகளை நிலைநிறுத்தப் போராட்டம் நடந்தும், காலம் தோற்கடித்து விட்டதென மனிதர் உணர்ந்தனர். அப்போதுதான் சுதந்திரமான கருத்துப் பரிவர்த்தனை மூலமே விரும்பியவிதம் இறுதி நன்மையையடைய முடியும்; மாறுபட்ட எண்ணங்களை வெளியிடும் போட்டி மூலம் ஒரு கருத்தின் வலிமையை ஏற்றுக்கொள்ள வைப்பதே உண்மையைச் சோதிக்கும் மிக சிறந்த முறையாகும் என நம்புவார்கள்."

நீதியரசர் ஹோம்ஸ் "சுதந்திரமான கருத்து வர்த்தகம்" மற்றும் "சந்தை நடுவே போட்டி" முதலியன பற்றி குறிப்பிடுவதின் விளைவாக, "கருத்துக்களின் சந்தைத் தளம்" என்ற சொற்றொடர் தோன்றியது. இது குறைந்த பட்சம் 300 ஆண்டு வயதாகிவிட்ட கருத்துருவத்தின் 20ம் நூற்றாண்டு அமெரிக்க அடையாள முத்திரையாகும். ஒரு வரலாற்றுத் திருப்பம் மூலம் இந்த இரண்டு ஆங்கில எழுத்தாளர்களும் முன்வைத்த வாதாடல்களே ஐக்கிய அமெரிக்க அரசியல் யாப்பின் முதல் திருத்தத்துக்கு கருத்துரைப் பிரமாணமாக அமைந்துள்ளன.

ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் யாப்பு எழுத்து வடிவம் பெற்றது. அதில் பல மாமூலான திருத்தங்கள் இடம்பெற்றுள்ளன. 1791ல் முதன்முறையாக புகுத்தப்பட்ட திருத்தம் மூலம் அமெரிக்கக் குடிமக்களின் பேச்சு சுதந்திரம் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது. அது கூறுகிறது: "பேச்சு சுதந்திரத்தையோ அல்லது பத்திரிகை சுதந்திரத்தையோ அடக்கிச் சுருக்கும் சட்டமெதையும் காங்கிரஸ் சபை நிறைவேற்றமாட்டாது". கருத்துவெளியிடும் சுதந்திரம் குறித்து அமெரிக்காவின் ஈடுபாடு 1791ல் ஆரம்பமாகவில்லை. ஏற்கனவே ஒருநூற்றாண்டுக்கும் அதிகம் பழமையாகிவிட்ட மக்கள் பாராட்டுக்குரிய அரசாங்க மரபொன்றை இந்த அரசியல் சட்டத்திருத்தம் தொகுத்தது.

பொதுமக்கள் நேரடியாகக் கலந்துகொள்ளும் சுயாட்சி முறையை அமெரிக்க நகரக் கூட்டங்களில் காணலாம். இவை நியூஇங்கிலாந்தில் 17ம் நூற்றாண்டில் வழக்கிலிருந்தன. நகர மக்கள் கூட்டம் கூடுவது

ஜனநாயகம் பற்றிய பண்பியலான விவகாரங்களை விவாதிப்பதற்கல்ல. ஒரு புதிய குப்பை அல்லது தீயணைப்பு வண்டியை வாங்குவதா, அல்லது ஏற்கனவே உள்ள பாடசாலையை புதுப்பிப்பதா அல்லது புதியதொன்றை நிர்மாணிப்பதா என்பது போன்ற பிரச்சினைகளை விவாதிக்கவே கூட்டங்கள் நடைபெற்றன. குடிமக்கள் ஆளுநர்களாகவே கூடினர். ஆளுவதன் நிமித்தம் அவர்கள் பேசவேண்டும். கருத்துவேற்றுமை தவிர்க்க முடியாது – "பொதுநலவமைப்பில் குறைபாடுகள் தோன்றவே கூடாது" என்று நாம் எதிர்பார்க்க முடியாதென்று மில்டன் குறிப்பிட்டார் – ஆகவே கருத்துக் கண்ணோட்ட மோதலும் தவிர்க்க முடியாதது. இவ்விவகாரங்கள் குறித்து கருத்துரைகள் அனைத்தும் வெளியிடப்பட வேண்டியது பொதுமக்கள் இறைமைக்கு இன்றியமையாததாகும்.

இருந்த போதிலும், ஜனநாயக அரசுகள் கூட வேறு காரணங்களின்றி மக்கள் வெளியிட்ட கருத்து காரணமாக, அவர்களை தண்டித்துள்ளன அல்லது வேதனைப்படுத்தியுள்ளன. மில்டன் கனவு கண்டதை விட, மில் விரும்பியதை விட விசாலமான வாக்குரிமை பெற்ற நாடுகள் கூட, சில கருத்துக்கள் வெறுப்பூட்டுபவை, ஆபத்தானவை என்பதற்காக அடக்கப்பட வேண்டும் என்ற எதேச்சாதிகார நம்பிக்கையால் பீடிக்கப்படுகின்றன.

சமுதாயத்தில் மேலோங்கிநின்ற கருத்துரைகள் சில தாக்குதலிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமென கூறப்படும் சிந்தனையை ஜோன் ஸ்டுவர்ட் மில் 1859லேயே தீர்க்கதரிசனத்துடன் கண்டார். இப் பாதுகாப்பு அக்கருத்துரைகள் புறவயமாகவோ அல்லது "விஞ்ஞான ரீதியாகவோ" உண்மை என்பதால் அல்ல – அவற்றின் சமூக மற்றும் அரசியல் முக்கியத்துவம் காரணமாகவே வேண்டப்பட்டது. இவ்வாறான தலைமைபெற்ற கருத்துரைகள் அரசியல் அமைப்பு பிரதிநிதித்துவ அரசாங்கம் மற்றும் பேச்ச சுதந்திரம் சார்ந்ததாய் இருக்கலாம்; பொருளாதார அமைப்புகள் அல்லது சமய செயற்பாடுகள் பற்றியதாய் இருக்கலாம்.

இவ்வாறு அடக்குவது சுதந்திரமான பேச்சு என்ற கருத்துக்கு முரண்பாடாய் உள்ள போதிலும், ஓர் இலட்சியத்துக்கு கட்டுப்பட்டிருத்தல் என்ற அடிப்படையில் நியாயப்படுத்தி வாதிடப்படுகிறது. கருத்து ஒருமைப்பாட்டில் சமுதாயம் காலூன்றி நிற்கிறது; இந்த ஒருமைப்பாடு யாவரும் பகிர்ந்துகொள்ளும் தேசிய நோக்கையடைவதற்கு ஓரளவு வேறுபாட்டை ஏற்றுக்கொள்கிறது

என்று வாதிக்கப்படுகிறது. பொதுநோக்கையடைவதற்கான மிகச்சிறந்த வழி வகை பற்றிய உருப்படியான விவாதத்துக்கு இக்கருத்து ஒருமைப்பாட்டிற்கு அப்பாலான கருத்துரை பங்களிப்பதில்லை; ஆனால் வேறுபட்ட நோக்கங்களை ஊக்குவிக்கிறது. அதாவது, சமுதாயம் காலூன்றி நிற்கும் கருத்து ஒருமைப்பாட்டிற்கு அவை சவால் விடுகின்றன. அவ்வாறாக சமுதாயத்துக்கே சவால் விடப்படுகிறது. பேச்சு சுதந்திரத்தை ஒழித்துக்கட்டப் போவோரை பேச்சு சுதந்திரத்தின் உத்தரவாதங்கள் பாதுகாக்கக்கூடாது என இன்னொரு எதிர் கோணத்தில் கூறப்படுகிறது. மிகவும் திறந்து கிடக்கும் சமுதாயம் கூட அதன் எதிரிகளிலிருந்து தன்னை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்; அச்சமுதாயத்தின் அத்திவாரத்துக்கே சவால் விடுவோர் எதிரிகளாக கருதப்பட்டு, எதிரிகளாக நடத்தப்பட வேண்டுமென வாதம் முடிவுறுகிறது.

மில்டனோ அல்லது மில்லோ ஜனநாயக அமைப்புகளினூடாக செயல்படும் சுயாட்சி புரியும் மக்கள், பெரும்பான்மையினர் பேச்சு சுதந்திரத்தை நசுக்கிய நிலைபரத்தை மனத்திற்கொள்ளவில்லை.

ஒரு குறிப்பிட்ட கருத்துக்கு - ஜனநாயகம் என்ற கருத்தாகக் கூடவிருக்கலாம் - மக்களை இணங்கச்செய்ய வேண்டும் என்பது எதிர்பார்த்த நன்மைகளை பயக்காது என வலியுறுத்தினர்; பாதுகாக்கப்பட்ட கருத்தை பலப்படுத்துவதை விட நலிவுறச் செய்யும் என்று இருவரும் எச்சரித்தனர். "வெளியே சென்று பகைவனை எதிர்கொள்ள முடியாமல் தப்பித்து பிழைக்க வேண்டுமென்று ஓடுபவனையோ ஒதுங்கி ஏகாந்தத்தில் செயல்படும் நல்லொழுக்கத்தையோ என்னால் புகழ முடியாது" என்று மில்டன் எழுதினார். "எதிர்மாறான நிலைப்பாட்டை முன்வைத்து வாதிடும் பரிசோதனை நடைபெற்றாலே தூய்மையடையலாம்" என்றுங் கூறினார். நம்பிக்கைகளில் பற்றுடையவர்கள் அவற்றை விவாதம் மூலம் புரிந்துகொள்ளாது நம்பப்பட வேண்டுமெனப்படுவதால் அந்நம்பிக்கைகளில் பற்றுவைக்க நியாயமற்றவர்களாக உள்ளனர்; உண்மையில் அவர்களிடம் கருத்துரை அறவே கிடையாது, உள்ளது விருப்பு வெறுப்பு மாத்திரமே என்று சுட்டிக் காட்டி மில் இணக்கம் தெரிவித்தார். "அவ்வாறு உருவாகும் உண்மை, அதனைத் தெளிவுபடுத்தும் சொற்களுடன் தற்செயலாக ஒட்டிக்கொள்ளும் இன்னுமொரு மூட நம்பிக்கையாய் இருக்கும்" என்ற முடிவுக்கு வந்தார் மில்.

அவ்வாறு சிந்திப்பது ஒரு சுதந்திரமான மக்களுக்கு பெருமை தருவதன்று. ஒரு கருத்து மீதுள்ள ஈடுபாடு வலுவான விவாதத்தையெதிர்த்து நின்று நிலைநாட்டப்படாத பட்சத்தில், அக்கருத்திற்கொண்ட நம்பிக்கைக்கான காரணங்களை தெளிவாக புரிந்துகொள்ள முடியாது. ஆகவே அது நலிவான வாதங்களின் தாக்குதலுக்கு இலக்காகிறது. உச்சாடணம் மூலம் பெற்ற நம்பிக்கை உதவாச்சரக்கு; அது அரசியல் அங்கத்தில் ஒரு பலவீனமாக அமையும். திறனாய்வு புரியாத போக்காக இருக்கும் போது சிலர் திறனாய்வைச் சிந்தனையின்றி பின்பற்றுவர் – ஒரு காலத்தில் அதன் நோக்கத்தைக் கடைப்பிடித்தது போல்; வேறு சிலர் அஞ்சி நிராகரிப்பார்கள். விவாதமென்பது பழகிப் போன போக்காக இருந்தாலே உயிர்துடிப்புள்ள வாத-விவாதம் செழித்தோங்கிவளரும். இந்த நிலையை சடுதியாக அடைய முடியாது. அல்லது விருப்பு வெறுப்பு தோன்றாது என்றும் உத்தரவாதப்படுத்தவும் முடியாது.


கடைசியாக குறிப்பிடப்பட்டதற்கு உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவின் பிதாமகர்களில் இருவரான, ஒருவரோடொருவர் மோதிக்கொண்ட அலக்ஸாந்தர் ஹமில்டனும் தோமஸ் ஜெ.ஃபர்ஸனும் திகழ்கின்றனர். அமெரிக்காவின் அரசியல் யாப்பை வரைந்தளித்தவர்களில் ஒருவர் ஹமில்டன். தனிநபர் உரிமைகள் அரசியல் யாப்பில் ஏற்கனவே உத்தரவாதம் செய்யப்பட்டிருந்த காரணத்தால், உரிமை சாசனமொன்று தேவையில்லை என்று மறுத்தார். இதற்கு இணங்க மறுத்த ஜெ.ஃபர்ஸன் மரபுமுறைப்படி உத்தரவாதங்கள் சேர்க்கப்பட வேண்டுமென வெற்றிகரமாகக் கருத்துரைத்தார். இருவரும் பத்திரிகை மற்றும் பேச்சு சுதந்திரங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென தீவிரமாக வாதித்தனர். அவற்றுக்கு திட்டவட்டமான விதிகள் புகுத்தப்பட வேண்டியதன் மெய்யறிவு, பயனுறுதி பற்றி மாத்திரமே வேறுபட்டனர். துயரமான உண்மை என்னவென்றால் இவ்விருவரும் பதவியிலிருந்தபோது, எதிரணி பத்திரிகைகள்மீது வழக்குத் தொடரப்பட்டதை ஆதரித்தனர்.

அதன் உருப்படியான பெறுபேறு என்னவென்றால் இந்த நடவடிக்கைகள் ஹமில்டனினதும், ஜெ.ஃபர்ஸனினதும் அரசியல் எதிரிகளை அடக்கியொடுக்கத் தவறிவிட்டன. இதற்கான முக்கிய காரணம் என்னவென்றால் சுதந்திரப் பிறவிகளான மக்கள் சுதந்திரத்தை இலேசாக கைவிட்டு விடுவதில்லை. தனிநபர்களை பயமுறுத்தி வாயடைத்து வைக்க முடியலாம். ஆனால், ஏற்கனவே

பழகிப் போனவர்களாக இல்லாத பட்சத்தில் ஒரு மக்கள் சமுதாயத்தை அடக்கிவைக்க முடியாது. உரிமை சாசனத்துக்கு எதிராக ஹமில்டன் 1988ல் எழுதியது இங்கு பொருத்தமானது: "பத்திரிகை சுதந்திரம் மீறவொணாது பாதுகாக்கப்படும் என்ற பிரகடனத்தின் தனிச்சிறப்பு என்ன?.... இது தொடர்பாக என்னென்ன அழகான பிரகடனங்கள் அரசியல் யாப்பில் செருகப்பட்டாலும், அதன் பாதுகாப்பு பொதுமக்கள் கருத்துரைகளிலும் மக்களினதும் அரசாங்கத்தினதும் மனப்பாங்கி- லும் தங்கியிருக்கும்."

மார்க் ட்வொயின் (1835 - 1910)

# ஹக்ல்பெரி ஃபின்னின் துணிகரச் செயல்கள்



ஹக் & ஜிம்

அமெரிக்கப் புனை கதையியலில் மாபெரும் படைப்புகளுள் ஒன்றான ஹக்ல்பெரி ஃபின்னின் துணிகரச் செயல்கள் மார்க் ட்வைனின் தலை சிறந்த நாவ லாகும். நூலின் இளம் கதா நாயகன் ஹக் ஃபின். உதவாக் கரையான குடி காரத் தந்தை டக்ளஸ்ஸின் விதவையிடமிருந்து தன்னைக் கூட்டிச் சென்றதிலிருந்து தன் துணிகரச் செயல்களை ஹக் விவரிக்கின்றான். தந்தையிடமிருந்து தப்பிச் சென்று ஜிம் என்பவனோடு சேர்ந்து கொள்கின்றான். ஜிம், செல்வி வாட்ஸன் என்ற எஜமானியிட மிருந்து ஓடி வந்த அடிமை. இரு வரும் கட்டு மரமொன்றில் மிசிசிப்பி நதியில் மிதந்து செல்கின்றனர்.

சுற்றித் திரியும் திருடர்களான இரு மோசடிக்காரர்களிடம் ஹக்கும் ஜிம்மும் சிக்கிக் கொள்கின்றனர். ஹக் கரையிலிருக்கும் போது அவர்கள் ஜிம்மைக் கட்டுமரத்திலிருந்து கடத்திச் செல்கின்றனர். ஜிம்மை சன்மானத்துக்கு விற்றுவிடுவதுதான் அவர்கள் நோக்கம் (ஓடிச் செல்லும் அடிமைகளைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு அந்நாளில் சன்மானப் பணம் உண்டு). நடந்ததை அறியவந்ததும், நண்பனைக் காப்பாற்றத் தேவையில்லையென ஹக்

*தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொள்கிறான்.*

அடிமையாக இருந்தாக வேண்டிய காலமெல்லாம், ஜிம் அவனது குடும்பம் இருக்கிற வீட்டில் அடிமையாக இருப்பதுதான் அவனுக்கு ஆயிரம் மடங்கு நல்லதென ஒருமுறை எனக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன். எனவே நான் டொம்ஸோயருக்கு எழுதி அவன் இருக்குமிடத்தை வாட்ஸன் செல்விக்கு அறிவிக்குமாறு சொல்வது தான் நல்லது. ஆனால் இரு காரணங்களுக்காக அந்த யோசனையை விட்டுவிடுகிறேன்; அவளை விட்டு ஓடிச்சென்ற நன்றிகெட்ட நடத்தையையும், சண்டாளத்தனத்தையும் நினைத்து அவள் வெறிகொள்வாள்; அவள் அப்படிச் செய்யாவிட்டாலும், நன்றிகெட்ட காப்பிலியை இயல்பாகவே எல்லோரும் ஏளனஞ் செய்வர். எந்நேரமும் அவனைக் சுட்டிக் காட்டுவர். அவன் அவமானப்படுவான். இனி, என் நிலையை யோசித்தால்! ஒரு காப்பிலி சுதந்திரம் பெறுவதற்கு ஹக் ;பின் உதவினான் என்ற கதை எல்லா இடங்களுக்கும் பரவிவிடும்; அந் நகரிலுள்ள எவரையும் நான் மீண்டும் காண நேர்ந்தால், அவமானம் தாங்காது அவரது பாதணியை நக்குவதற்கும் தயாராகிவிடுவேன். அதுதான் சரியான வழி: ஒருவன் கீழ்த்தரமான காரியத்தைச் செய்துவிட்டு, பின்அதற்குப் பொறுப்பேற்க விரும்புகிறானில்லை. மறைக்க முடிகிற வரைக்கும் அதில் அவமானமில்லையென நினைக்கிறான். இதுவே என் சங்கடமான நிலை. இதனைப் பற்றி நினைக்க நினைக்க என் மனச்சாட்சி என்னை உறுத்தியது. மகா கெட்டவனாக, கேவலமானவனாக நான் இருப்பதாக உணர்ந்தேன். கடைசியில், திடீரென மனச்சாட்சி என்னை தாக்கியபோது, தெய்வத்தின் கரம் என் கன்னத்தில் அறைவதாக, எனக்கு எந்தவொரு தீங்குஞ் செய்யாத ஒரு முதியவளிடமிருந்து அவளது காப்பிலி அடிமையை நான் கவரும்போது – மேலே விண்ணிலிருந்து எப்போதும் கண்காணிக்கப்பட்டு - இப்போது என் துரோகச் செயல் எனக்கு உணர்த்தப்படுகிறது. எப்போதும் என்னை ஒருவர் பார்த்துக் கொண்டிருக்கிறார். இத்தகைய துரோகச் செயல்கள் இதற்கு மேல் செல்ல அவர் அனுமதிக்கமாட்டார். நான் வழியில் குந்திவிட்டேன். என்னைப் பயம் பீடித்துக் கொண்டது. நான் தீயவனாகவே வளர்க்கப்பட்டவன்; ஆகவே என்னைக் குற்றஞ் சொல்ல முடியாது எனச் சொல்லி என்னைத் தேற்றிக் கொள்ள முயன்றேன்; ஆனால் எனக்குள் ஏதோவொன்று கூறிக்கொண்டேயிருந்தது, “ஞாயிறு பாடசாலை இருந்ததே; நீ அங்கு போயிருக்கலாம் தானே; அங்கு நீ சென்றிருந்தால், காப்பிலியின்

காரியத்தில் நீ நடந்துகொண்டதுபோல் நடப்பவர்கள் நிரந்தர நரக நெருப்பில்தான் வீழ்வார்கள் என்பதை கற்றுக் கொண்டிருப்பாய்".

என் அந்தராத்மா என்னை நடுங்கச் செய்தது. நான் பிரார்த்தனை செய்யத் தீர்மானித்தேன். நான் இருக்கிற மாதிரி இராமல் நல்ல பையனாக இருக்க முடியாதா என முயற்சித்துப் பார்க்க நினைத்தேன். எனவே முழந்தாளில் மண்டியிட்டேன். ஆனால் வார்த்தைகள் வரவில்லை. ஏன் வரமறுக்கின்றன? அதனை கடவுளிடமிருந்து மறைக்க முயல்வதில் பயனில்லை. என்னிடமிருந்தும் அதனை மறைக்க முடியாது. அவை ஏன் வரமறுக்கின்றனவென்பதை நான் நன்கறிவேன். என் மனம் அசுத்தமானது; நான் நேர்மையற்றவன்; நான் போட்டிருப்பது இரட்டை வேடம். நான் பாவத்தை விடுவதற்கு முயற்சிக்கிறேன்; ஆனால் என்னுள்ளே மிகப் பெரும் பாவத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். நான் சரியான செயலை, தூயசெயலைச் செய்வேன்; போய் காப்பிலியின் எஜமானிக்கு எழுதி,, அவனிருக்குமிடத்தை அறிவிப்பேன் என என் வாயினால் சொல்ல முயற்சிக்கிறேன்; ஆனால் அது பொய்யென்பதை என் உள்ளத்தினுள்ளே உணர்ந்தேன்; ஆண்டவனும் அதை அறிவார். பொய் மொழியால் பிரார்த்தனை புரிய முடியாது என்பதனை நான் அறிந்து கொண்டேன்.

எனவே நான் முற்றுமுழுதாய் சங்கடப்பட்டேன். என்ன செய்வதென்றே தெரியவில்லை. கடைசியாக எனக்கொரு யோசனை தோன்றிற்று, என்ன செய்வதென எனக்குத் தெரியும் என எனக்கே சொல்லிக் கொண்டேன். நான் போய் கடிதத்தை எழுதுவேன். அப்புறம் பிரார்த்தனை புரிய முடியுமா எனப் பார்ப்பேன். என்ன அற்புதம்! பெரும்பாரம் தீர்ந்தது போலிருந்தது. என் துன்பங்கள் நீங்கின. கடதாசியையும் பென்சிலையும் எடுத்துக் கொண்டு உணர்ச்சிவசப்பட்ட மகிழ்ச்சியோடு உட்கார்ந்து எழுதினேன்.

"செல்வி வாட்ஸனுக்கு, உங்களின் ஓடுகாலி காப்பிலி ஜிம் இங்கு இரு மைல் தூரத்தில் பிக்கெஸ்வில் என்ற இடத்தில் இருக்கிறான். திரு. .:.வெல்ப்ஸ் அவனை வைத்திருக்கிறார். நீங்கள் சன்மானத்தை அனுப்பிவைத்தால் அவர் அவனை விட்டுவிடுவார்."

*ஒரு முடிவுக்கு வந்துவிட்டபடியால் ஹக் ஆறுதலடைகின்றான். ஆனால் ஜிம்மோடு தன் நட்பை நினைக்கும்போது மறுபடியும் மனம் சோர்கின்றது. அவனது தீர்மானம் நலிவடைகின்றது. தீவிர மனமாற்றத்துக்கு ஆளாகின்றான்:*

பாவம் கழுவப்பட்டு, வாழ்நாளில் முதன்முதலாக நான் ஒரு

நல்லவன் என உணர்ந்தேன். இப்போது என்னால் பிரார்த்தனை புரிய முடியும்போல் தோன்றியது. எனினும் உடனே நான் அப்படிச் செய்யவில்லை. கடதாசியைக் கீழே வைத்துவிட்டு அமர்ந்து சிந்தனையிலாழ்ந்தேன். இவ்வளவெல்லாம் நடந்தது நல்லதாய்ப் போச்சு. எல்லாமிழந்து நரகத்துக்குச் செல்லுமளவுக்கு எவ்வளவு தூரம் நெருங்கி வந்துவிட்டேன். சிந்தனை நீடித்தது. எங்கள் நதிப்பயணத்தை எண்ணிப் பார்த்தேன். ஜிம் எந்நேரமும் என் கண் முன்னால் நிற்கின்றான்: பகலில், இராப்போதில், சிலநேரம் நிலாவெளிச்சத்தில், சிலநேரம் புயலில் நாம் மிதந்து செல்கிறோம். அளவளாவிக் கொண்டு, பாடிக்கொண்டு, ஆனந்தமாகச் சிரித்துக்கொண்டு அவனுக்கெதிராக என்னுள் எந்தவொரு பகுதியுமே இறுகிக் கடினமாகக் காணோம்; ஆனால் அதற்கு நேர்மாறாக, மூடுபனியிலிருந்து விடுபட்டுத் திரும்பிவரும்போது, என்னை அழைப்பதற்குப் பதில் உச்சியிலிருந்து அவன் என்னைக் கவனித்துக் கொண்டிருப்பது தெரிகிறது. பிணக்கு நேர்ந்த சேற்று நிலத்துக்கு அவனிடம் வருகையில் - அத்தகைய நேரங்களில் - அவன் எப்பொழுதும் என்னை "தேனே" என்று அழைக்கின்றான், செல்லம் பண்ணுகிறான். தன்னால் நினைக்கமுடிந்ததையெல்லாம் எனக்காக வேண்டிச் செய்கின்றான். இறுதியில், தெப்பத்திலிருந்த போது எங்களுக்கு அம்மைநோய் ஏற்பட்டதெனச் சொல்லி ஆட்களிடமிருந்து அவனைக் காப்பாற்றியது என் நினைவுக்கு வருகிறது. அவன் நன்றியுணர்ச்சி மிக்கவனாய்க் காணப்படுகிறான். இவ்வுலகில் எப்பொழுதும் - இப்பொழுதும் - ஜிம்மின் மிகச் சிறந்த நண்பன் நான்தான் என்கிறான். அப்புறம் நான் திரும்பி அக்கடதாசியைப் பார்க்கின்றேன்.

அது ஒரு குறுகிய இடம். கடதாசியை எடுத்துக் கையில் பிடித்தேன். கை நடுங்கிற்று. இரண்டு காரியங்களில் ஒன்றை நான் - என்றென்றைக்குமாக - முடிவு செய்தாக வேண்டும். எனக்குப் புரிந்துவிட்டது. மூச்சைப் பிடித்துக்கொண்டு ஒரு நிமிடம் யோசனையிலாழ்கிறேன். அப்புறம் எனக்கு நானே கூறிக்கொண்டேன்:

"சரி, அப்படியானால் நான் நரகத்திற்குச் செல்கிறேன்."

- கடதாசியைக் கிழிக்கின்றேன்.

பயங்கரமான சிந்தனைகள். பயங்கரமான வார்த்தைகள் - எனினும் அவை மொழியப்பட்டுவிட்டன.

"சரி, அப்படியானால் நான் நரகத்திற்குச் செல்கிறேன்" - *அதுவும் ஓர் ஓடுகாலி அடிமைக்காக; 1884ல் சில வாசகர்களுக்கு ஹக்கின் செய்கை கொடுஞ்*

செயலாகப்பட்டது. இந்நாளில், கிறிஸ்தவம் இன்னும் சக்திமிக்கதாய் விளங்கியபோதும், அது இப்போது வலுமிக்க சமூக வைதிக மார்க்கமாக இல்லை. மேலும் இன்று ஒரு சிலரே நரகத்தில் நம்பிக்கை வைக்கின்றனர். எனினும் இந்நேரகாலம் ஒரு மகத்தான நேரகாலமாகும் : ஒரு கதாபாத்திரம் தனக்காகவே சிந்திக்கும் காரியத்தில், சம்பிரதாயமான தப்பெண்ணத்தின் விளைவுகளைப் புரிந்துகொண்டு, மனச்சாட்சியின் ஆளுமையை ஏற்று, துணிச்சலோடு சுதந்திரமாய்த் தீர்மானமெடுப்பதை ட்வெயின் நாம் காணும்படி செய்யும் நேரகாலமாகும்.

---

சகதோழனுடனொருவன்
நடைதூரம் வைத்திடானெனில்
காரணமேதுமிருக்குமோ – அவன் காதில்
வேறொருவனின் முரசொலி
விழுகிறதோ.
அவ்வொலி நாதத்தினொலியில்
பயிலட்டுமவன் நடை..
–அதன்
சந்தம் பற்றியோ
தொலை பற்றியோ
கவலையில்லை.

தொரயூ

ஜே.எஸ்.மில் (1806-1873)

# தனிநபரின் தனித்துவம் பற்றி

*பிரிட்டனில் ஜனநாயக உரிமைகள், சமூக சீர்திருத்தம் என்பவற்றை வென்றெடுக்க பரந்துபட்ட இயக்கங்கள் உருவாயின. அவ்வியக்கங்களில் பங்குகொண்ட 19ம் நூற்றாண்டுகால தீவிர கொள்கையுடைய தத்துவஞானிகளின் முன்னணியினர் ஜோன் ஸ்ருவர்ட்மில், நிலப்பிரபு வர்க்கத்தின் சிறப்புரிமைகளுக்கு எதிராகவும், வாக்குரிமையைப் பரவலாக்கவும் பாராளுமன்றத்தைச் சீரமைக்கவும், பெண்களின் விடுதலைக்காகவும் பிரித்தானிய நிறுவனங்களையும் சமூகத்தையும் ஜனநாயக மயப்படுத்துவதற்காகவும் இவ்வியக்கங்கள் உழைத்தன. மில்லின் மூன்று முக்கிய எழுத்தோவியங்கள் அவரின் புகழ் பரவுவதற்கு உதவின.*

*அவையாவன :*

*1. விடுதலை பற்றிய கட்டுரை, பேச்சுச் சுதந்திரத்தை 19ம் நூற்றாண்டில் பாதுகாத்ததாக ஒப்புக்கொள்ளப்பட்ட மேம்பாடுடைய எழுத்து.*

*2. பிரதிநிதித்துவ அரசாங்கம் பற்றிய ஆராய்வு (1861); ஜனநாயக அரசியல் விவகாரங்களில் செல்வாக்குப் பெற்ற நூல்*

*3. பெண்களை அடக்கியாள்தல் (1869), பெண்களுக்கு வாக்குரிமையளிக்க வேண்டுமென வற்புறுத்திய அவரது புகழ்பெற்ற அறிக்கை.*

*அக்காலத்து அரசியல் பிரச்சனைகளில் அயராது ஈடுபட்டவர். 1865 இல் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அங்கு 1866-67 இல் வாக்குரிமைச் சீரமைப்பு சட்டவாக்கங்களில் முக்கியமான பங்குவகித்தார். அடிமை ஒழிப்பு இயக்கத்தில் வட அமெரிக்கருக்கு ஆதரவு வழங்கினார். பிரிட்டனில் காணிக் குத்தகைச் சீர்திருத்தம் வேண்டி சட்டநகல் சமர்ப்பித்தார். அக்காலத்து ஜனநாயக சீர்திருத்தவாதிகள் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருந்ததையும் மீறிய தீவிரக் கொள்கையுடையவர். 1867 பெண்களின் வாக்குரிமைக்கான சங்கங்களின் தேசிய ஒன்றியத்தை அமைத்த பிதாமகர்களில் ஒருவர். சாள்ச் பிரட்லோ என்னும் நாத்திகர் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டு விவிலிய நூலைத் தொட்டு சத்தியப் பிரமாணஞ் செய்ய மறுத்தமைக்காகத் தமது பதவியை இழந்தார். அவரின் தேர்தல் செலவுகளுக்காக பண உதவி செய்தவர். ஜமெக்கா ஆளுநர் தமது ஆட்சியைக் கவிழ்க்க முயற்சித்த கிளர்ச்சியாளர்மீது கட்டவிழ்த்த மிருகத்தனமான அடக்குமுறையை மில் தாக்கினார். இவ்விவகாரங்கள் அனைத்திலும் அவர் காட்டிய துணிச்சல் 1868 பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியுற வழியிட்டது. ஓய்வு பெற பிரான்ஸ் நாட்டுக்குச் சென்ற அவர் 1873ம் ஆண்டு இறந்தார்.*

வழக்கமல்லாத கருமங்களுக்கு சாத்தியமான அளவு சுயேச்சையாக செயல்பட வசதியளிப்பது முக்கியம். ஏனென்றால் காலப்போக்கில் அவற்றில் எவை வழக்கமாக உருப்பெறும் என்பதை அவ்வண்ணந்தான் தெரிந்துகொள்ளமுடியும் என்று நான் கூறியிருக்கிறேன். ஆனால், சிறந்த செயல் முறைகளும் பொதுவாக பின்பற்றக்கூடிய பழக்க வழக்கங்களும் துடைத்தழிக்கப்படக்கூடிய

ARCHIVES

323.4
MAR AR

சந்தர்ப்பம் ஏற்படலாம் என்ற காரணமாக அவை மாத்திரமே ஊக்குவிப்புக்கு உரித்தானவையல்ல. சொந்த வழியில் தமது வாழ்வை நடத்துவதற்கு தீர்க்கமான சிந்தனா மேன்மையுடையோர் மாத்திரமே முறையான உரிமையுடைப யோரல்லர். ஒரேயொரு அல்லது ஒரு சில சிறிய முன்மாதிரியை வைத்து வாழ்க்கை அனைத்தும் வகுக்கப்படுவதற்கு நியாயமில்லை. ஒரு நபரிடம் ஓரளவு பகுத்தறிவும் அனுபவமும் இருந்தால், தனது வாழ்வை வகுத்துக் கொள்ளும் அவருடைய வழிமுறை மிகச் சிறந்ததாகும். அதுவே எல்லாவற்றிலும் மிகச் சிறந்ததென்பதல்ல காரணம்; அது அவருடைய வழி என்பதே காரணமாகும். மனிதர்கள் ஆட்டுமந்தைகளல்லர். ஆட்டு மந்தைகள் கூட பிரித்தறியவொண்ணாத ஒரே மாதிரியானவையல்ல. ஒரு மனிதன் அளவான மேலங்கியையோ அல்லது ஒரு சோடி சப்பாத்துக்களையோ, அளவுக்கு தைக்கப்படாதிருந்தால் அல்லது தேர்ந்தெடுப்பதற்கு கடைகள் நிறைய இல்லாதிருந்தால் பெற்றுக்கொள்ள முடியாது. அவனுக்கு ஏற்ற மேலங்கியொன்றை பெற்றுக்கொள்வதை விட ஏற்ற வாழ்வை தேர்ந்துகொள்வது இலேசா? மனிதர்களின் பாத உருவத்தை விடவும் அவர்களுடைய முழு உடல் மற்றும் ஆன்மீக அமைப்பில் ஒவ்வொருவரும் ஒத்திருக்கின்றனரா? சுவையில் மாத்திரம் மனிதர்கள் மத்தியில் வேற்றுமைகள் இருப்பின் அது அவர்களனைவரை ஒரே மாதிரியில் உருவாக்க முயல்வதற்கு போதிய காரணமாக அமையாது. ஆனால், வெவ்வேறு மனிதர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு வெவ்வேறு சூழல்கள் தேவைப்படுகின்றன. எவ்வாறு பல்வேறு வித பயிர்கள் அனைத்தும் ஒரே மாதிரியான பௌதீக, சூழல், தட்பவெட்ப நிலைமையின் கீழ் உயிர் வாழ முடியாதோ, அவ்வாறே வெவ்வேறு மனிதர்கள் ஒரே தார்மீக சூழலில் ஆரோக்கியமாக உயிர்வாழ முடியாது. ஒரு நபர் அவனுடைய உயர்ந்த பண்புகளை வளர்ப்பதற்கு உதவியாய் உள்ள அதே பொருள் மற்றவனுக்கு தடையாகவிருக்கலாம். ஒருவனுடைய இயல்வலிமை மற்றும் அனுபவிப்பு சக்திகளை சிறந்த முறையில் வைத்திருப்பதற்கு ஆரோக்கியமான ஊக்குவிப்பாகவுள்ள ஒரே மாதிரியான வாழ்க்கை மாதிரி,மற்றொருவனுக்கு அக வாழ்வு அனைத்தையும் ஊசலாடவிட்ட நிலைமையில் வைக்கும் அல்லது குழப்பி நசுக்கிவிடும் சுமையாகிவிடலாம். மகிழ்ச்சியின் மூலம், துன்பத்தின் பாதிப்பு மற்றும் பல்வேறு பௌதிக, தார்மீக சக்திகள் ஏற்படுத்தும் தாக்கம் முதலியவற்றில் மனிதர்களிடையே இவ்வாறான வித்தியாசம் உள்ளன. அவர்களுடைய வாழ்க்கைமுறையில் பொருத்தமான வேறுபாடுகள்

ARCHIVES

இல்லாது போனால் அவர்களுக்கு மகிழ்ச்சியின் நியாயமான பங்கு கிடைப்பதில்லை, இயல்பாகவே அடையக்கூடிய அவர்களுடைய சிந்தனா, தார்மீக, அழகியல் வளர்ச்சியுயரத்தை அவர்கள் அடைவதில்லை.

ARCHIVES

# நன்றி நவிலல்

இலங்கை ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் பின் குறிப்பிட்டவர்களுக்கு கடமைப்பட்டுள்ளது.

- கலிலியோவின் "உரையாடல்" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டு இங்கே வெளியிட்டிருக்கும் பகுதி "சட்டோ மாற்றுக்கருத்து நூல்" (சட்டோவும் ஃவின்டஸ் இலண்டன் 1991 பதிப்பு - பதிப்பாசிரியர்கள், மைக்கெல் றோசன், டேவிட் ஃவிட்கெறி) என்னும் தொகுப்பிலிருந்து.
- முன்னட்டை வரைச்சித்திர அலங்காரம் கலிலியோவின் "இரண்டு பிரதான உலக அமைப்புகள் பற்றிய உரையாடல்" என்ற நூலில் இருந்து - புளோறென்ஸ் 1632 (அரிய நூல்கள், கையெழுத்துப் பிரதிகள், நியூயோர்க் பொது நூலகம் அஸ்டர் லெனொக்ஸ், ரில்டன், அறநிதியங்கள்)
- கலிலியோவின் உருவப்படம் ஒட்டாலியோ எல்யோனி வரைந்தது. 1624 (படஅச்சுப் பதிவு - அச்சுத்தொகுப்பு மிரியாம், டொ டீ ஃவலாக் கலைப்பகுதி, அச்சுப்பதிவுகளும் நிழ்ல் படங்களும், நியூயோர்க் பொதுநூலகம், அஸ்டர் லெனொக்ஸ்ரில்டன் அறநிதியங்கள்)
- அமெரிக்க நூலக சங்கத்தின் அனுமதியுடன் ஹக்ல்பெரிஃபின் வரைச்சித்திரம் மறுஅச்சேறியுள்ளது (வாராவார வள ஆதார நூல் என்ற 1988 தடைசெய்யப்பட்ட வெளியீட்டிலிருந்து).
- றோஸா லக்ஸம்பர்க் நிழல் படம் "றோஸா லக்ஸம்பர்க் பேசுகிறார்" என்ற நூலிலிருந்து (பதிப்புரிமை 1970 பாத்வைன்டர் அச்சகத்துக்கு - பிரதி பதிப்பு அவர்கள் அனுமதியுடன்)

"சர்வாதிகாரம் பற்றிய பிரச்சினை" மேற்கூறப்பட்ட நூலிலிருந்தும் "றஷ்யப் புரட்சியும் லெனின் சிந்தனையுமா அல்லது மார்க்ஸ் சிந்தனையுமா" - றோஸா லக்ஸம்பர்க் (அன் ஆர்பர் பேப்பர் பாக்ஸ் வெளியிட்ட பொதுவுடமையும் மாக்ஸ் சித்தாந்தமும் பற்றிய சிந்தனை ஈடுபாடு - மிச்சிக்கன் பல்கலைக் கழக அச்சகம் 1961) என்ற நூலில் இருந்தும்.

மூல நூல்களைத் தேடிக் கண்டுபிடிப்பதிலும் பதிப்புரிமையாளரிட மிருந்து அனுமதி பெறுவதிலும் பேருதவி புரிந்த ஆசிய விழிப்பியக்கத்தின் ஜீனின் கத்ரிக்கு ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் பிரத்தியேகமாகக் கடமைப் பட்டுள்ளது.

பின்னட்டையில் இடம்பெறும் ஜ.உ.பா.இ சின்னம் றிச்சார்ட் கேபிறியலின் கைவண்ணம்.


"இன்டெக்ஸ் ஒன் சென்ஸாஷிப்" நல்கிய ஊக்குவிப்புக்கும் நடைமுறை ஆதரவுக்கும் ஜ.உ.பா.இ மீண்டுமொரு முறை தனது கடமைப்பாட்டைத் தெரிவிக்கின்றது.

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
ARCHIVES

## இந்த வெளியீட்டு தொடரில் 1ம் வெளியீடு உங்கள் வசம் உள்ளதா?

19ம் நூற்றாண்டு மருத்துவ நிபுணர் ஜோன்ஸநோ வாந்திபேதி பரவுவதைத் தடுக்க, ஆற்றிய ஆராய்ச்சிப்பணி, பாவத்துக்கெதிராகக் குரலெழுப்பிய ஷேக்ஸ்பியரின் லியர் மன்னன் நாடகத்தில் வரும் ஏழைச்சேவகன், தானே தனக்குள் சிந்திப்பதின் முக்கியத்துவம் பற்றிய கௌதமபுத்தரின் மதிநுட்பஞ்செறிந்த அறுவுரை - இவையனைத்தும் "மாற்றுக் கருத்தின் மதிப்பு I" அடங்கியுள்ளது. ஜனநாயகம் பற்றி ஈ.எம். ஃபொஸ்டர், (1937), பேச்சுச் சுதந்திரம் பற்றி நீதியரசர் லூயி பிரண்டைஸ் (1927), ஆதம் மிச்னிக் சிறைச்சாலைக் கடிதங்கள் (1983) இவ்வெளியீட்டை அணிசெய்கின்றன. இதற்கெனறே 1992ல் ஸ்டீவன் ஸ்பெண்டர் முன்னிருந்த சோவியத் யூனியன் கிழக்கைரோப்பா ஆகிய நாடுகளில் ஜனநாயகம் வருங்காலம் பற்றித் தமது ஆதங்கத்தை எம்முடன் பகிர்ந்து கொள்கிறார். ஐ.உ.பா.இ. முன்னுரை வழங்கியுள்ளது.

நூல் விற்பனை நிலையங்களிலும், வேறு விற்பனை நிலையங்களிலும் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் பிரதி ஒன்றுக்கு ரூபா 20.00 க்குக் கிடைக்கும். அஞ்சல் மூலம் பெறுவதானால் மு.ப. 9.30 பி.ப. 4.30 இடையில் இல. 31, சார்ள்ஸ் பிளேஸ், கொழும்பு - 3 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.



Printed by Karunaratne & Sons Ltd.